கருமத்தம்பட்டி நகராட்சியில் 27.02.2025ம் நாள் நடைபெற்ற மன்றக்கூட்டத்தின் தீர்மான நகல்கள்.

மன்றப் பொருள் எண்.01

கருமத்தம்பட்டி நகராட்சி வார்டு எண்.07 கருமத்தம்பட்டி காவல் நிலையம் அருகில் உள்ள பகுதியில் ஆழ்துளை கிணறு இல்லாததால் மேற்படி புதியதாக ஆழ்துளை கிணற்று அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.75 இலட்சம் ஆகும்.மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

தீர்மானம் எண்.754

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

மன்றப் பொருள் எண்.02

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10அம்புரோஸ் நகரில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.75 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

தீர்மானம் எண்.755

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

மன்றப் பொருள் எண்.03

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணிகள் பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7) ன்படி சரிசெய்யப்படுள்ளது.அவற்றின் விவரம் பின்வருமாறு

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04 செகுடந்தாளியின் மையப்பகுதியில் அமைந்துள்ள கழிப்பிடத்தின் மேற்கூரை சரிசெய்யும் பணி | 5.00 |

| | | |
|---|---|---|
| 2 | கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 எளச்சிபாளையம் சாலையில் உள்ள எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் உள்ள அங்கன் வாடி மையத்தின் மேற்கூரை சரிசெய்தல் | 5.00 |
| 3 | கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட மாதப்பூர் சாலையில் உள்ள வணிக வளாக கடை மேற்கூரையில் உள்ள ஓடுகள் சரிசெய்தல் | 8.00 |
| 4 | கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீர் அளவு எடுக்கும் அளவு மானி பழுது சரி செய்யும் பணி | 0.64 |
| 5 | கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 பூளக்காடு பகுதியில் ஆழ்துளை கிணற்றில் UPVC குழாய் மாற்றும் பணி | 1.00 |

எனவே மேற்கண்ட பணிகளை பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7)ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.756**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.4**

கருமத்தம்பட்டி நகராட்சியில் புதிதாக கட்டப்படும் மின்மயானம் மற்றும் சமுதாய கூடத்திற்கு மண் கொட்டப்படுவதற்கு தேவையான மண் நகராட்சிக்குட்பட்ட குட்டைகள் மற்றும் நீர்நிலைகளில் இருந்து மாவட்ட ஆட்சியரிடம் உரிய அனுமதி பெற்று எடுப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.757**

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

மன்றப் பொருள் எண்.5

அரசாணை எண் 166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் :23.11.2016 ல் நகராட்சி பகுதியில் உள்ள பள்ளிகளின் கழிவறைகள் மற்றும் பள்ளிவளாகத் தூய்மை பணிகளை தனியார் வெளிக்ணர்வு முகமை ஒப்பந்தம் (Out Sourcing ) மூலம் அமர்த்திக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண்.758

**புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்கவும் ஒப்பந்தத்தை உறுதி செய்யும் வரை தற்போது பணியை மேற்கொள்ளும் நிறுவனமே பணியினை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.**

மன்றப் பொருள் எண்.06

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 ஆத்துப்பாளையம் இந்திரா காலனி பகுதியில் ஆழ்துளை கிணற்று நீருக்கான பகிர்மான குழாய் இல்லை. எனவே மேற்படி பகுதியில் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்காக பகிர்மான குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.0.85 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண்.759

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

மன்றப் பொருள் எண்.07

தமிழ் புதல்வன் திட்டம் மான்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கடந்த 09.08.2024 அன்று அரசு கலைக் கல்லூரி மைதானத்தில் நடத்தபட்டதற்கான செலவினத்தொகை ரூ.2.00 இலட்சத்தை கருமத்தம்பட்டி நகராட்சிக்கான பங்குத்தொகை செலுத்த மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே தி/வா நாவல் அன்ட் கோ என்ற நிறுவனத்திற்கு மேற்படி தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது..

அலுவலக குறிப்பு

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண்.760

**மன்றம் அனுமதி அளிக்கிறது.**

மன்றப் பொருள் எண்.8

கருமத்தம்பட்டி நகராட்சி – பொதுசுகாதாரப்பிரிவு பொதுமக்களின் சுகாதார நலன் கருதி பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான தளவாட சாமான்கள் கிருமிநாசினிகள் பிளிச்சீங் பவுடர் சுண்ணாம்புத்தூள் கொசுப்புழு ஒழிப்பு பணிகளுக்கு தேவையான மருந்துகள் வாங்கிக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.00 லட்சத்திற்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அதன்படிபொது சுகாதார பிரிவு -- கருமத்தம்பட்டி நகராட்சி பள்ளிகளில் கழிவறைகள் மற்றும் பள்ளிவளாக தூய்மை பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்தம் மூலம் இவ்வலுவலக நகர்மன்ற தீர்மானத்தில் (தீர்மான எண் 289 / 2023 - நாள் 27.09.2023) அனுமதி பெறப்பட்டு ஸ்ரீ. தங்கம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ்-கோயம்புத்தூர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கி தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்த காலமானது 28.02.2025 ம் தேதியுடன் முடிவடைந்ததை தொடர்ந்து குறைவான கால அவகாசமே உள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ தொகை ரூ.25.00 - இலட்சத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண்.761

மன்றம் அனுமதி அளிக்கிறது.

மன்றப் பொருள் எண்.09

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.332/2024/அ3 நாள்.06.03.2024 மற்றும் 11.11.2024 அன்றைய ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி புதிதாக தரம் உயர்த்தப்பட்ட கருமத்தம்பட்டி நகராட்சிக்கு படை வீரர் கொடிநாள் 2023 நிதி வசூல் தொகையாக ரூ.1, 50,000/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தின்படி உதவி இயக்குநர், மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலக ந.க.எண்.332/2024/அ3 நாள்.18.11.2024ன்படி மேற்காண் தொகை செலுத்த கோரப்பட்டுள்ளதால் கருமத்தம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் புதிய சொத்துவரி, சொத்துவரி பெயர் மாற்றம், காலியிட வரி, புதிய குடிநீர் இணைப்பு குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம், தொழில்வரி கேட்பு நிர்ணயம் , தொழில் உரிமக்கட்டணம் கேட்பு நிர்ணயம், பிறப்பு, இறப்பு சான்றிதழ், கட்டிட உரிமம் மற்றும் மனை வரன்முறைப்படுத்த பெறப்படும் விண்ணப்பம் ஆகிய

விண்ணப்பங்கள் பெறப்படும் பொழுது படைவீரர் கொடிநாள் தொகையாக ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ரூ.100/- வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.762**

மன்றம் அனுமதி அளிக்கிறது.

**மன்றப் பொருள் எண்.10**

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை.அவர்களின் கடிதம் ந.க.எண். 2571/2017/ ஜே1. நாள் 20.11.2017, 23.04.2018 .மற்றும் ஓ.மு.எண்.13433/2018/ஜே1 நாள்;17.09.2018. கடிதத்தில் நகராட்சி பகுதிகளில் டெங்கு மற்றும் இதர நோய்கள் பரவுவதை தடுக்கும் பொருட்டு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை (Domestic Breeding Checkers.DBC workers) வெளிக்கொணர்வு முகமை ஒப்பந்தம் (Out Sourcing)முறையில் பணியமர்த்திக் கொள்ளவும் இப்பணியினை ஆண்டு முழுவதும் மேற்கொள்ளவும் ஒவ்வொரு 300 குடியிருப்புகளுக்கு ஒரு கொசு புழு ஒழிப்பு பணியாளர் என பணியமர்த்திக் கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது அதன்படி கருமத்தம்பட்டி நகராட்சி பகுதிகளில் டெங்கு மற்றும் இதர நோய்கள் பரவுவதை தடுக்கும் பொருட்டு கொசுப்புழு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள D.B.C பணியாளர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்தம் மூலம் இவ்வலுவலக நகர்மன்ற தீர்மானத்தில் (தீர்மான எண் 432 /2024 - நாள் 29.02.2024) அனுமதி பெறப்பட்டு ஸ்ரீ சிவசக்தி பில்டர்ஸ் சோமனூர், அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கி களப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் கருமத்தம்பட்டி நகராட்சியில் மொத்தம் 10938 குடியிருப்புகள் உள்ளன 300 குடியிருப்புகளுக்கு தலா ஒரு பணியாளர் வீதம் 36 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர் . தற்சமயம் டெங்கு மற்றும் இதர நோய்கள் பரவுவதை தடுக்கும் பொருட்டு கொசுப்புழு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள 25 பணியாளர்களை தனியார் வெளிக்கொணர்வு ஒப்பந்தம் மூலம் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் E1906944/2024/இ3 நாள்;22.07.2024 உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்தபுள்ளி கோரி பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவும் அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.40.00-இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**<u>தீர்மானம் எண்.763</u>**

**புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்கவும் ஒப்பந்தத்தை உறுதி செய்யும் வரை தற்போது பணியை மேற்கொள்ளும் நிறுவனமே பணியினை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.**

<u>மன்றப்</u> பொருள் எண்.11

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் சொத்துவரி / குடிநீர் கட்டணம்/ தொழில்வரி / காலியிடவரி / கடைவாடகை / தொழில் உரிமக்கட்டணம் ஆகியவற்றின் வசூல் பணியினை துரிதப்படுத்திடவும் 100% வசூல் செய்திடுமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் 04.11.2024 ல் நடத்தப்பட்ட காணொளி ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, வசூல் பணியினை துரிதப்படுத்திட ஏதுவாக ஆட்டோ ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு வரி செலுத்திட தெரிவித்து விளம்பரம் செய்திட ஸ்ரீ சௌடேஸ்வரி பப்ளிசிட்டி, சோமனூர் அவர்களுக்கு பணியின் அவசர அவசியம் கருதி 21.11.2024 முதல் பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டது. 21.11.2024 முதல் 07.02.2025 வரை ஆட்டோ மூலம் 79 நாட்கள் விளம்பர பணி மேற்கொள்ளப்பட்டதற்கு நாள் ஒன்றுக்கு ரூ.3,300/- வீதம் 79 நாட்களுக்கு ரூ.2,60,700/- ஐ ஸ்ரீ சௌடேஸ்வரி பப்ளிசிட்டி, சோமனூர் அவர்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.764</u>**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

<u>மன்றப்</u> பொருள் எண்.12

கருமத்தம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கட்டண கழிப்பிடமானது 05.02.2021 அன்று பொது ஏலம்விடப்பட்டு திரு.கே.நடராஜன் என்பவரால் ரூ.4,82,000/- க்கு ஏலம் எடுக்கப்பட்டு 01.10.2021 முதல் 30.09.2023 வரை குத்தகைதாரரால் நடத்தப்பட்டு வந்தது. மேற்படி குத்தகைதாரர் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் நவம்பர்-2023 ஆண்டு நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டு தற்போது நகராட்சி மூலம் துறைரீதியான வசூல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி கட்டண கழிப்பிடத்திற்கு அக்டோபர்-2023 மற்றும் நவம்பர்-2023 க்கு கணினியில் கேட்பு எழுவதற்கு பதிலாக தவறுதலாக அக்டோபர்-2023 முதல் செப்டம்பர்-2024 வரை கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. எனவே, தவறுதலாக டிசம்பர்-2023 முதல் செப்டம்பர்-2024 வரை தவறுதலாக கேட்பு எழுப்பப்பட்ட தொகை ரூ.4,21,750/- ஐ கணினியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.765**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.13**

1998ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கள் சட்டம், பிரிவு 70ன்படி, இந்நகராட்சிக்கான வரவு செலவு திட்டம் தயாரித்து ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதம் முடிவதற்கு முன்பாக, மன்றம் அதற்கு ஒப்புதலளிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே கருமத்தம்பட்டி நகராட்சியின் 2024-2025ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்டம் (Revised Budget) மற்றும் 2025-2026ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்டம் (Estimate Budget) மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.766**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.14**

கருமத்தம்பட்டி நகராட்சி 27.00 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டுள்ளது. நகராட்சி பகுதிகளில் வெளிநபர்கள் கட்டிட குப்பைகள் மற்றும் கோழி கழிவுகள், மருத்துவ கழிவுகள் ஆகியவற்றை இரவு நேரங்கள் மற்றும் ஆட்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளில் கொட்டுவதால் சுகாதார கேடு ஏற்படுகிறது. எனவே மேற்படி குப்பைகள் மற்றும் கழிவுகள் கொட்டுவதை கண்காணிக்க முக்கிய இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.20.00இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.767**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.15**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் பயன்பாட்டில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு மின்மோட்டார்மூலம் நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளது. எனவே மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை

ரூ.5.00இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.768**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.16**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 14 வரை உள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள மின்மோட்டார்களை பழுது நீக்கம் செய்யும் பணி ரூ.5.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் பணியில் தற்போது வரை ரூ.4.00 இலட்சம் செலவு செய்யப்பட்டு மீதம் ரூ.1.00 இலட்சம் மட்டுமே உள்ளது. எனவே புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி மன்றத்தில் பொருள் வைக்கப்பட்டுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி வார்டு எண்.1 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணியை ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ஸ்ரீ சிவசக்தி பில்டர்ஸ்,சோமனூர். அவர்கள் கூடுதலாக மூன்று மாதங்களுக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.5.00இலட்சம் ஆகும். எனவே பணியை மேற்படி நிறுவனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.769**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.17**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 ஜெய்ஹிந்த் நகர் பகுதியில் நடுவீதியில் உள்ள ஒரு பொதுக்குழாயை மாரன் வீட்டு அருகிலும், ஜெய்ஹிந்த் நகர் பெரிய வீதியில் உள்ள ஒரு குழாயை கந்தசாமி வீட்டு அருகிலும், ஓம்சக்தி கோவில் அருகில் உள்ள பொதுக்குழாய் சாலையின் அருகில் போக்குவரத்திற்கு இடையூராக உள்ளதால் அவற்றை இடம் மாற்றி கருப்புசாமி வீட்டின் பின்புறம் அமைத்து தர கோரியுள்ளனர். தற்போது புதியதாக பொதுக்குழாய்கள் அமைக்க இயலாது என்பதாலும் பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசத்தை கருத்தில் கொண்டு மேற்கண்டவாறு உள்ள 3 பொதுகுழாய்களை இடம் மாற்றியமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.770**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.18**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்25 மாதப்பூர் சாலையில் நகராட்சி அலுவலகத்தின் தென்புறத்திலிருந்து,வில்பர்ட் மளிகை கடை வரை உள்ள பகுதிகளில் புதியதாக பகிர்மான குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.0.80 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.771**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.19**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 பிருந்தாவன் நகர், கருப்பராயன் கோவில் விதிகளில் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கான பகிர்மான குழாய் 1 1/2" மற்றும் 2" இன்ச் ஆக உள்ளதால் சரியாக தண்ணீர் செல்வதில்லை. எனவே மேற்கண்ட பகுதிகளில் புதியதாக பகிர்மான குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.772**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.20**

கருமத்தம்பட்டி நகராட்சியில் புதிய அலுவலக கட்டிடம் வருகின்ற 20.02.2025 அன்று திறக்கப்பட உள்ளதால் பழைய அலுவலக கட்டிடத்தில் உள்ள பொருட்களை புதிய அலுவலக கட்டிடத்திற்கு கொண்ட செல்ல ஆகும் போக்குவரத்து செலவு மற்றும் இதர செலவினத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.773**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.21**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் பணிகள் பொதுமக்கள் நலன் கருதி குடிநீர் அத்தியாவசிய பணிகளை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7)ன்படி மேற்கொள்ளப்பட்டது.அவற்றின் விவரம் பின்வருமாறு

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
| --- | --- | --- |
| 1 | கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 வில்வமரத்து நால்ரோடு பகுதியிலிருந்து சேடபாளையம் சாலையில் உள்ள ஆழ்துளை கிணற்று மின்மோட்டாரில் இரும்பு குழாயிலிருந்து UPVC குழாயாக மாற்றும் பணி | 1.20 |
| 2 | கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03 சென்னியாண்டவர் கோவில் அருகே பச்சை காம்ளைக்ஸ் அருகில் உள்ள ஆழ்துளை கிணற்று மின்மோட்டாரில் இரும்பு குழாயிலிருந்து UPVC குழாயாக மாற்றும் பணி | 0.80 |
| 3 | கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 கணபதி நகர் 5 வது வீதியில் உள்ள ஆழ்துளை கிணற்றை சுத்தம் செய்து ஆழப்படுத்துதல் பணி | 1.80 |

எனவே மேற்கண்ட பணிகளை பொதுமக்கள் நலன் கருதி குடிநீர் அத்தியாவசிய பணிகளை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7)ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.774**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.22**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 ஜெய்ஹிந்த் நகர், ராயர்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் மற்றும் தோட்டத்து சாலை ஆகிய பகுதிகளில் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு பகிர்மான குழாய் இல்லை . எனவே மேற்கண்ட பகுதிகளில் புதியதாக பகிர்மான குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.775**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.23**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 எம்.ஜி.ஆர் காலனி பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பகிர்மான குழாய்கள் பழுதடைந்துள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளில் புதியதாக பகிர்மான குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.776**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.24**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 செகுடந்தாளி சாலையில் மகாகணபதி சைசிங் எதிர்புறம் உள்ள மின்மோட்டார் அடிக்கடி பழுதடைந்துள்ளது. மேலும் மேற்கண்ட மின்மோட்டார் பேரூராட்சி நிர்வாகத்தில் பொருத்தப்பட்டு 15 வருடங்களுக்கு மேல் ஆகிறது. எனவே மேற்கண்ட ஆழ்துளை கிணற்றில் புதியதாக 10HP மின்மோட்டார் பொருத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.777**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.25**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 வீரமாத்தி காலனியில் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு ஆழ்துளை கிணற்று மின்மோட்டர் இல்லாததால் மேற்படி பகுதிக்கு சுமார் 750 மீட்டர் தொலைவிலிருந்து தண்ணீர் விநியோகம் செய்வதால் சரியாக தண்ணீர் வருவதில்லை. எனவே மேற்கண்ட பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணற்று அமைத்து மின்மோட்டார் பொருத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.778**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.26**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25 மில் ரோடு வராச்சந்தை வளாகத்தில் புதியதாக கடைகள் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு வேலை உத்தரவு 30.06.2024ல் வழங்கப்பட்டது. பிறகு அந்த இடத்தில் புளிய மரத்தை அப்புறப்படுத்த வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் அனுமதி பெறுவதில் ஏற்பட்ட காலதாமத்தால் கடந்த 24.07.2024 ஆம் தேதி ஏலம் விடப்பட்டு பிறகு அப்புறபடுத்தப்பட்டது. எனவே தற்போதைய கட்டுமான பொருட்களின் விலை உயர்வால் பணியை மேற்கொள்ள இயலவில்லை என ஒப்பந்ததாரர் கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார். எனவே மேற்கண்ட பணிக்காக வேலை உத்தரவை ரத்து செய்து புதியதாக தற்போதைய விலை விகிதத்திற்கு ஒப்புதல் பெற்று பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.779**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.27**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.21 சேடபாளையம் வாய்கால்பாளையத்தில் உள்ள குடிநீர் மேல்நிலைத்தொட்டியின் பராமரிப்பு பணிகள் தற்போது முடிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட மேல்நிலைத்தொட்டியை பயன்பாட்டிற்கு கொண்டு வர சேடபாளையம் மேல்நிலைத்தொட்டியிலிருந்து புதியதாக HDPE குழாய் பதிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.780**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.28**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 கருமத்தம்பட்டி காவல் நிலையம் அருகில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுசுவர் மற்றும் முன்புறம் GI சீட் இல்லை. எனவே மேற்கண்ட அங்கன்வாடி மையத்திற்கு சுற்றுசுவர் மற்றும் முன்புற கூரை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.781**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.29**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04 கருவேலங்காடு பகுதிக்கு குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கான ஆழ்துளை கிணற்று நீர் செகுடந்தாளி பகுதியிலிருந்து செல்கிறது. மேலும் பகிர்மான குழாய் அமைக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆகிறது. எனவே பகிர்மான குழாய் பழுதடைந்து அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட பகுதியில் புதியதாக பகிர்மான குழாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.782**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.30**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 சி.டி.சி டிப்போ பின்புறம் உள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள மின்மோட்டாரின் கேபிள் மிகவும் பழுதடைந்துள்ளது. மேற்படி கேபிள் பேரூராட்சி நிர்வாகத்தால் பொருத்தப்பட்டு நீண்ட நாட்கள் ஆகிறது. எனவே மேற்படி கேபிள் மாற்ற வேண்டியுள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சம் ஆகும். எனவே மேற்கண்ட பணி குடிநீர் அத்தியாவசிய பணியாக உள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7)ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் தி/வா. ஸ்ரீ சிவசக்தி பில்டர்ஸ், சோமனூர். மூலம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.783**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.31**

பொது சுகாதார பிரிவு - கருமத்தம்பட்டி நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 1 முதல் 27 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் குப்பை கழிவுகளை சேகரம் செய்யும் பணியினை பணியாளர்களை கொண்டு குப்பைகளை தரம்பிரித்து அதனை இறுதியாக்கம் செய்யப்படும் இடத்தில் வாகனங்கள் மூலம் ஒப்படைத்தல்,

பணிகளை மேற்கொள்ள வெளிக்கொணர்வு ஒப்பந்தம் மூலம் இவ்வலுவலக நகர்மன்ற தீர்மானத்தில் (தீர்மான எண் 84/2023 - நாள் 05.04.2023 ) அனுமதி பெறப்பட்டு செந்தூர் எண்டர்பிரைசஸ், திருப்பூர் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி களப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் மேற்படி பணிகளை மேற்கொள்ள புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரவும் 28.02.2025 வரை தற்போது இப்பணிகளை மேற்கொண்டு வரும் செந்தூர் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தையே பணி மேற்கொள்ளவும், இவ்வலுவலக நகர்மன்ற தீர்மானத்தில் **(தீர்மான எண்.750/2025 நாள்.30.01.2025)** அனுமதி பெறப்பட்டு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மேற்படி பணிகளை புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிநடவடிக்கை மேற்கொள்வதில் காலதாமதமாவதால் பொது மக்களின் நலன் கருதியும், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தத்தை உறுதி செய்யும் வரை தற்போது இப்பணிகளை மேற்கொண்டு வரும் செந்தூர் எண்டர்பிரைசஸ், திருப்பூர் நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பணிஉத்தரவில், ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதத்திற்கு, ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டு ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.784</u>**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**<u>மன்றப்</u> பொருள் எண்.32**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 காரணம்பேட்டை சாலையில் உள்ள மயானத்தின் அருகில் உள்ள மண் சாலை பொதுப்பணிதுறைக்கு சொந்தமான க.ச.எண்.121/1 மற்றும் 129/1 ஆகிய இரண்டு புலங்களில் பாசன கால்வாய்களின் வலது கரையின் 242.00 மீட்டர் கிழ மேல் நீளத்திற்கு 4.00 மீ அகலத்தில் நகராட்சி மூலம் தார்சாலையாக மாற்றும் பணிக்கு கண்காணிப்பு பொறியாளர்,நீவது, பவானி வடிநில வட்டம் ,ஈரோடு அவர்களிடமிருந்து தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளதை செயற்பொறியாளர் நீவது பவானி சாகர் அணைக்கோட்டம் கடித எண். வப/இ.வஅ.3/கோ.73/2025/87எம்/ நாள்.06.02.2025 கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்படுகிறது. எனவே மேற்படி மண் சாலையினை தார்சாலையாக மாற்றியமைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.785**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.33**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 சேடபாளையத்திலிருந்து செகுடந்தாளி செல்லும் சாலையில் பிளாக் மாரியம்மன் கோவில் எதிரில் உள்ள ஆழ்துளை கிணற்றின் மின்மோட்டார் பழுதடைந்துள்ளது. மேற்படி மின்மோட்டார் பேரூராட்சி நிர்வாகத்தால் பொருத்தப்பட்டு நீண்ட நாட்கள் ஆகிறது. எனவே மேற்படி ஆழ்துளை கிணற்று மின்மோட்டார் மாற்ற வேண்டியுள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.45 இலட்சம் ஆகும். எனவே மேற்கண்ட பணி குடிநீர் அத்தியாவசிய பணியாக உள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7)ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் தி/வா. ஸ்ரீ சிவசக்தி பில்டர்ஸ், சோமனூர். மூலம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.786**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.34**

கருமத்தம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கருமத்தம்பட்டியில் உள்ள திருமண மண்டபத்தில் பராமரிப்பு பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளது. எனவே மேற்படி மண்டபத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வர பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.787**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.35**

பொது சுகாதார பிரிவு - கருமத்தம்பட்டி நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 1 முதல் 27 முடிய உள்ள அனைத்து வார்டுகளிலும் குப்பை கழிவுகளை சேகரம் செய்யும் பணியினை பணியாளர்களை கொண்டு குப்பைகளை தரம்பிரித்து அதனை இறுதியாக்கம் செய்யப்படும் இடத்தில் வாகனங்கள் மூலம் ஒப்படைத்தல், பணிகளை மேற்கொள்ள கருமத்தம்பட்டி நகராட்சிக்கு வெளிக்கொணர்வு ஒப்பந்தம் மூலம் நகராட்சியில் சேகரமாகும் குப்பைகளின் அளவின்படி பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர்

சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் :33552/2022/EA2 – SWM – நாள் 10.01.2023 -ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| QUANTITY OF WASTE GENERATED ( TPD ) | 11.32 MT |
| RATE PER TONNE ( IN RS ) | 5044 |
| ESTIMATED BASE COST PER DAY ( RS IN LAKH ) | 0.57 ( 5044 X 11.32 MT ) |
| ESTIMATED BASE COST PER YEAR ( RS IN LAKH ) | 208.05 (0.57 X 365 DAYS) |
| APPLICABLE GST 18% AND LWF 1% (RS IN LAKH ) | 39.52 |
| ESTIMATED TOTAL COST PER YEAR ( RS IN LAKH ) | 247.57 |

அதன்படி இவ்வலுவலக நகர்மன்ற தீர்மானத்தில் (தீர்மான எண் 84/2023 - நாள் 05.04.2023 ) அனுமதி பெறப்பட்டு ஒரு மெட்ரிக் டன்னுக்கான தொகை ரூ.5037 என குறைந்த ஒப்பந்த புள்ளி தெரிவித்த செந்தூர் எண்டர்பிரைசஸ், திருப்பூர் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி களப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இந்நிலையில் இந்நகர்மன்ற தீர்மானத்தில் (**தீர்மான எண்**.750/2025 **நாள்**.03.01.2025) திருவாளர்கள் செந்தூர் எண்டர்பிரைசஸ் திருப்பூர் நிறுவன ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், மேலும் மறுஒப்பந்தத்தை உறுதி செய்யும் வரை மேற்படி நிறுவனத்தை பணிகள் மேற்கொள்ளவும் அனுமதி அளித்துள்ளது.

எனவே புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்கவும், தற்சமயம் உள்ள விலை உயர்வுக்கு ஏற்ப ஒப்பந்த தொகையினை 10% உயர்வு செய்து தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஒரு மெட்ரிக் டன்னுக்கான தொகை ரூ.5044/- லிருந்து ரூ.5548/- என உயர்வு செய்து, ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை எடுக்கவும், ஒரு வருடத்திற்கான செலவினம் ரூ.232.24 மற்றும் சேவை அமர்த்துவோரின் சேவை கட்டணம் 5% சேர்த்து ஓர் ஆண்டு மதிப்பீட்டுத் தொகை ரூ. 243.85 லட்சத்திற்கும், மேலும் சேவை வழங்குவோர் தமிழ்நாடு வெளிப்படையான டெண்டர் முறையின்படி மூன்று வருடத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் ஒவ்வொரு வருடமும் ஒப்பந்தப்புள்ளியினை செயல்திறனின் அடிப்படையில் நீட்டிப்பு செய்யவும், மேற்படி செலவினத்தை நகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| QUANTITY OF WASTE GENERATED ( TPD ) | 11.32 MT |

| | |
|---|---|
| RATE PER TONNE ( IN RS ) | 5548 |
| ESTIMATED BASE COST PER DAY ( RS IN LAKH ) | 0.63 (5548 X 11.32MT) |
| ESTIMATED BASE COST PER YEAR (RS IN LAKH) | 229.95 (0.63 X 365 DAYS) |
| LWF 1% ( RS IN LAKH ) | 2.29 |
| ESTIMATED TOTAL COST PER YEAR ( RS IN LAKH ) | 232.24 |

**<u>அலுவலக குறிப்பு</u>**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.788</u>**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**<u>மன்றப்</u> பொருள் எண்.36**

. கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 தொட்டியங்காடு பகுதியில் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு ஆழ்துளை கிணறு இல்லை. எனவே மேற்படி பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.789</u>**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**<u>மன்றப்</u> பொருள் எண்.37**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் வார்டு எண்.27 வரை உள்ள பகுதிகளில் புதியதாக 688 LED (20W) தெருவிளக்குகள் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் கடிதம் ந.க.எண்.949/2025/எம்எ1 நாள்.22.02.2025 ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**<u>தீர்மானம் எண்.790</u>**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

மன்றப் பொருள் எண்.38

கருமத்தம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட –நகராட்சி வார்டு-15, தொட்டியங்காடு கிருஷ்ணாபுரம் பகுதியில் சர்வே எண் : 241/2B1B, சுமார்- 0.35 ஏக்கர், 1412.00 சதுரமீ அளவில் ஓர் உத்தேச குடியிருப்பு ஜெய் ஸ்ரீ ஹோம்ஸ் என்ற

மனைபிரிவு அமைக்க, நகர் ஊரமைப்பு துறை, கோயம்புத்தூர் , அவர்களுக்கு மனு சமர்பித்ததையடுத்து, நகர் ஊரமைப்பு துறை இயக்குனர், கோயம்புத்தூர், அவர்கள் ந.க.எண்:CBELPA/5NSSUCEX/2024/TCP நாள்:09.12.2024.ல் சாலை வடிவமைப்பு (Road pattern) வழங்கியுள்ளார். இதையடுத்து தேவையான ஆவணங்களை பரிசீலனை செய்ததில் தார்சாலை, வடிகால், மின்சார வசதி செய்து தெருவிளக்குகள் அமைக்க தான சாசனம் மூலம் (ஆவன எண்: 13651/ 2024,18தாள்கள்) கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையாளர் பெயரில் பெயர் மாற்றம் செய்து நகர் ஊரமைப்பு துறை இயக்குனர், கோயம்புத்தூர் ந.க.எண். CBELPA/5NSSUCEX/2024/TCP நாள்:09.12.2024.ல் இறுதி ஒப்புதல் அளித்து ம.வ./ கோ.உ.தி.கு.எண்: 575/2024., நாள் : 09.12.2024 என்ற எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி அளித்துள்ளார். மேலும் பொது இடங்கள், மேல்நிலைத்தொட்டி, பூங்காக்கள், மின்சார கடத்தியின் புலம் (Transformer Land) ஆகிய இடங்களுக்கு கம்பிவேலி மற்றும் வருவாய் ஆவணங்களில் கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையாளர் பெயரில் பெயர் மாற்றம் செய்து வழங்க வரப்பெறப்பட்டுள்ளது. அதன் விபரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | சொத்து விவரம் | செக்குபந்தி விவரம் |
|---|---|---|
| 1 | சாலைகள் | அயிட்டம் எண் 01 - 9 மீட்டர் அகல கிழமேல் சாலை எண் 01க்கு செக்குபந்தி மற்றும் அளவு விபரம். தெற்கில் கிழமேலாக -45.7மீட்டர்வடக்கில் கிழமேலாக-48.2மீட்டர்கிழக்கில் தென்வடலாக-9 மீட்டர்மேற்கில் தேன்வடலாக-9மீட்டர் இதன் விஸ்தீரணம் 422.55 சதுரமீட்டர் விஸ்தீரணமுள்ள பூமி |
| 2 | மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி | இல்லை. |

| | | |
|---|---|---|
| 3 | திரவிடங்கள் (பொது உபயோகம்) | அயிட்டம் : 2, வடபுறம் கிழமேல் - 3.3 மீ, வடக்கில் கிழமேலாக - 3.3மீ, கிழக்கில் தென்வடலாக - 10.2 மீ, மேற்கில் தென்வடல் - 10.2மீ. இந்த அளவு கொண்ட 32.13 சதுர மீட்டர் பரப்பளவுள்ள பொது உபயோகம் இடம். |
| 4 | மின் கடத்தியின் இடம் (Transformer Land) | அயிட்டம் : 3 , தெற்கில் கிழமேலாக – 3.1 மீ, வடக்கில் கிழமேலாக – 3.1மீ, கிழக்கில் தென்வடலாக - 10.2 மீ, மேற்கில் தென்வடல் - 10.2மீ. இந்த அளவு கொண்ட 31.62 சதுர மீட்டர் பரப்பளவுள்ள பொது உபயோகம் இடம் |

1. மனைப்பிரிவில் குடிநீர் வசதிகள் , மின்சார வசதிகள் ஏற்படுத்த நகராட்சி பொறியாளரால் மதிப்பீடு தயாரித்து வழங்கப்பட்ட **மதிப்பீடுத் தொகை ரூ** 90000/-ஆகும்.

2. அரசானை எண்:79/04.05.2017 **ன்படி கூர்ந்தாய்வு கட்டணம்** ரூ500/- வீதம்9பிளாட்டிற்கு **ரூ4500** /-மும்,

3. நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை-28, அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.12843/2022/டிபி-2 நாள்:20.10.2022.ல் நிபந்தனை 9,10 ன்படி மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவீத மனைகள் அபிவிருத்தி அடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு உரிமையாளரை சாரும் என்பதால் **வைப்புத்தொகையாக** 1.00 இலட்சம் (ஒரு இலட்சம் மட்டும் ), ஒரு ஏக்கர் அல்லது அதன் பகுதி பரப்பளவிற்கு என கணக்கிட்டு வசூலிக்கபடவேண்டும் என தெரிவித்துள்ளபடியால் பரப்பளவு 0.35 ஏக்கர் ஆக உள்ளபடியால் **ரூ152750** /-,

4. மேலும் ஒதுக்கப்பட்ட மனைகள் அங்கீகாரம் செய்ய மனை ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 09 மனைகளுக்கு **ரூ.9000**/- .

5. மேலும் நன்னிலை வரி ரூ.2700/-

ஆக மொத்தம் **மதிப்பீடுத் தொகை ரூ** 90000/-, **கூர்ந்தாய்வு கட்டணம்** –**ரூ** 4500/- **வைப்புத்தொகை- ரூ** 100000/-, **நகராட்சியில் மனைப்பிரிவு அங்கீகாரம் செய்ய ரூ** 152750/-**மற்றும்** ஒதுக்கப்பட்ட மனைகள் அங்கீகாரம் செய்ய ரூ.9000/- **ஆகியவைகளை** செலுத்தியுள்ளார் .

ஆகவே நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை-28, அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி-2, நாள்:20.10.2022.ல் தெரிவித்த நிபந்தனைகளின்படியும், நகர் ஊரமைப்பு துறை இயக்குனர், கோயம்புத்தூர், அவர்கள், தெரிவித்த நிபந்தனைகளின் படியும் செயல்பட மனுதாரருக்கு அறிவுறுத்தி, மேற்படி, நகர் ஊரமைப்பு துறை இயக்குனர், கோயம்புத்தூர், அவர்கள் ந.க.எண்: CBELPA/5NSSUCEX/2024/TCP நாள்:09.12.2024.ல் இறுதி ஒப்புதல் அளித்து ம.வ./ கோ.உ.தி.கு.எண்: 575/2024. திட்ட அனுமதி எண்:579/2024, நாள்

: 09.12.2024. என்ற எண்ணிட்ட 09 மனைகளை கொண்ட மனைப்பிரிவிற் இறுதி ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.791**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.39**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7 கருமத்தம்பட்டி சர்வீஸ் சாலையில் அமைந்துள்ள வழிகாட்டி விநாயகர் கோவில் அருகில் உள்ள மழைநீர் வடிகாலின் கீழ் பகுதியில் உள்ள பகிர்மான குழாய் பழுதடைந்துள்ளது. மேற்படி பகுதியில் புதியதாக இரும்பு குழாய்கள் PVC குழாய்களை பதித்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.20 இலட்சம் ஆகும். எனவே மேற்கண்ட பணி குடிநீர் அத்தியாவசிய பணியாக உள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7)ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.தனபால்,சோமனூர். மூலம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.792**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.40**

கருமத்தம்பட்டி நகராட்சி பொது பிரிவு, கணினி பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் கணினிகளை இயக்குவதற்கு நிரந்தர பணியாளர்கள் எவரும் இல்லை என்பதால் மண்டல இயக்குனரகம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குனரக அலுவலகத்திலிருந்து கோரப்படும் புள்ளி விவரங்கள் மற்றும் இதர பணிகள் தட்டச்சு செய்ய தற்காலிக பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணிக்கு ஒரு கணினி இயக்குபவரை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.793**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.41**

நகராட்சி நிர்வாகத்தின் கட்டிட அனுமதி கோரி வரப்பெறும் சுயசார்பு அடிப்படையிலான குடியிருப்பு கட்டிடங்கள் தவிர்த்து இதர குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிட அனுமதி வழங்கும் ஒற்றை சாரர இணைய முகப்பில் மென்பொருள் தொகுதியை செயல்படுத்த ஒருங்கிணைந்த கட்டணம் நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட அரசாணை எண்.72 நகராட்சி நிர்வாக குடிநீர் வழங்கல் துறை நாள்.05.02.2025 ல் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டண விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.794**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

**மன்றப் பொருள் எண்.42**

கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் தேவைக்காக பில்லூர் கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும் குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு ஆழ்துளை கிணறு மூலம் குடிநீர் குழாய் வீட்டிணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி கீழ்காணும் பட்டியலில் உள்ள குடிநீர் இணைப்புகள் பேரூராட்சி காலத்தில் வழங்கப்பட்டு குடிநீர் இணைப்பிற்கு தொகை செலுத்தாத காரணத்தினால் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது. தற்போது வரை துண்டிக்கப்பட்ட இணைப்புகளை நீக்கம் செய்யாமலும் பதிவேடுகள் பராமரிக்கப்படாததாலும் தொடர்ந்து கேட்புகள் வந்து கொண்டுள்ளது. இதனால் நகராட்சியில் குடிநீர் கட்டண நிலுவை கேட்பு அதிகமாக உள்ளது. எனவே பட்டியலில் உள்ள குடிநீர் இணைப்பு எண்களை நீக்கவும், கேட்புகளை நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | புதிய குடிநீர் இணைப்பு எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | கோவிந்தராஜ், 43எச்,தெலுங்கு நகர், சோமனூர் | 168/020/900085 | 21600 |
| 2 | சண்முகசுந்தரம்,134, மெயின்ரோடு, கிருஷ்ணாபுரம்,சோமனூர் | 168/017/900078 | 23830 |
| 3 | ஜி,கோபால் சாமி,5,கிருஷ்ணாபுரம், சோமனூர். | 168/016/900518 | 13425 |
| 4 | என்.சென்னியப்பன் , 17டி1,கிருஷ்ணாபுரம்,சோமனூர். | 168/016/900527 | 13425 |

| | | | |
|---|---|---|---|
| 5 | வெங்கடாசலம்,28,வீரமாத்தி நகர், சேடபாளையம் | 168/021/900704 | 13425 |
| 6 | சண்முகசுந்தரம்,297/2 பிள்ளையார் கோவில் வீதி, செந்தில் நகர், சோமனூர் | 168/018/900798 | 13665 |
| 7 | ஆரோக்கியமேரி, 66,பாலாஜி நகர், கருமத்தம்பட்டி. | 168/008/900629 | 13065 |
| 8 | மாரிசாமி ,98பி, அன்னூர் ரோடு, கருமத்தம்பட்டி | 168/019/900863 | 10920 |
| 9 | எம்.வள்ளியம்மாள்,12எ1, செந்தில்நகர்,சோமனூர் | 168/018/900128 | 10920 |
| 10 | எ.ரங்கசாமி,48எ, 487எ1, செந்தில் நகர், சோமனூர் | 168/019/900336 | 10920 |
| 11 | சிதம்பரம் .486பி, கருமத்தம்பட்டி மெயின் ரோடு, செந்தில் நகர் | 168/019/900375 | 12510 |
| 12 | பி.ராமாத்தாள், 67எப், ஏ.கே மெயின்ரோடு, சோமனூர் | 168/023/900027 | 10920 |
| 13 | அருவஞ் செட்டியார், 69எ, தீப்பெட்டி மில் ரோடு,சோமனூர் | 168/024/900278 | 10920 |
| 14 | பி.மாராத்தாள்,102 ஏ,பி.சி, மெயின் ரோடு, சோமனூர் | 168/027/900120 | 10920 |
| 15 | மாதேஷ்வரன், 87பி, காந்தி நகர் தீப்பெட்டி மில் ரோடு, சோமனூர் | 168/024/900355 | 9600 |
| 16 | வி.மணி, 44,பாரதியார் நகர், கிருஷ்ணாபுரம் ,சோமனூர் | 168/015/900338 | 9360 |
| 17 | ஜி,ஜி. பழனிசாமி, 85இ,கிருஷ்ணாபுரம், சோமனூர் | 168/016/900886 | 9360 |
| 18 | நடராஜன், 3எ, மெயின்ரோடு, சோமனூர் | 168/027/900210 | 9360 |
| 19 | எம்.வெங்கடேசன், 2எ, சாரதாம்பாள் நகர், கருமத்தம்பட்டி. | 168/009/900509 | 8640 |
| 20 | பழனி, 31/13, மாரியம்மன் கோவில், கருமத்தம்பட்டி | 168/020/900059 | 6240 |
| 21 | ஆர். ராசப்பன் ,3வி, பாலாஜி நகர், கருமத்தம்பட்டி | 168/008/900147 | 8400 |

| | | | |
|---|---|---|---|
| 22 | எஸ்.நடராஜன், 93சி4, செந்தில் நகர், சோமனூர் | 168/018/900294 | 8400 |
| 23 | எம்.பழனிசாமி, 288எ, மெயின் ரோடு , செந்தில் நகர், சோமனூர் | 168/020/900140 | 7800 |
| 24 | வி.மணி, 44,பாரதியார் நகர், கிருஷ்ணாபுரம் ,சோமனூர் | 168/015/900229 | 7200 |
| 25 | கருப்பணன், 21,மெயின் ரோடு, சோமனூர் | 168/027/900080 | 7770 |
| 26 | வேலுசாமி , 2, சாரதாம்பாள் நகர், கருமத்தம்பட்டி | 168/009/900132 | 7770 |
| 27 | பழனி,31டி, ராயர்பாளையம், கருமத்தம்பட்டி | 168/002/900120 | 6240 |
| 28 | கே.ஜோதிமணி, 17, லட்சமி வெங்கடேஸ்வரா நகர், கருமத்தம்பட்டி | 168/009/900504 | 6000 |
| 29 | கே,பழனாத்தாள், 114,114பி, செந்தில் நகர், சோமனூர் | 168/018/900063 | 6240 |
| 30 | நாராயணன், செந்தில் நகர், சோமனூர் | 168/019/900574 | 6240 |
| 31 | ஆர்,சிவகாமி, 263, செச்தில் நகர், சோமனூர் | 168/019/900574 | 6240 |
| 32 | சென்னிமலை கவுண்டர், 36, ஆத்துப்பாளையம், சோமனூர் | 168/022/900270 | 6240 |
| 33 | மாரப்பகவுண்டர் ,168,டேங்க் வீதி, சோமனூர் | 168/018/900776 | 6000 |
| 34 | மாரன், 50/34,மாரியம்மன் கோவில் வீதி, கருமத்தம்பட்டி | 168/002/900062 | 6000 |
| 35 | சுப்புலட்சுமி ,75, பவர் ஹவுஸ் ரோடு, சோமனூர் | 168/024/900230 | 10515 |
| 36 | சண்முகசுந்தரம் | 168/018/900798 | 13200 |
| 37 | வள்ளியம்மாள் | 168/018/900128 | 10920 |
| 38 | பி.செந்தில் குமார் | 168/018/900432 | 6000 |
| 39 | செல்லமுத்து | 168/019/900372 | 3600 |
| 40 | ரங்கசாமி | 168/019/900336 | 10920 |
| 41 | நாராயணன் | 168/019/900147 | 6240 |
| 42 | ராமசாமி | 168/002/900158 | 13800 |

| | | | |
|---|---|---|---|
| 43 | மாரன் | 168/002/900062 | 6000 |
| 44 | எஸ்.கந்தசாமி | 168/008/900096 | 5700 |

**அலுவலக குறிப்பு**

**மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.**

**தீர்மானம் எண்.795**

**மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.**

ஆணையாளர்

கருமத்தம்பட்டி நகராட்சி